விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 கார்த்திகை 9 ஸபர் 30 இதழ் 282
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-11-84

## பீரங்கி, குண்டுகள், யானைத் தந்தங்கள் கொள்ளை!

### யாழ். நகரில் நேற்று சம்பவம்

[அலுவலக நிருபர்]

யாழ்: தொல்பொருட்காட்சிச் சாலையிலிருந்து பீரங்கியும், 4 குண்டுகளும், பெறுமதியுள்ள இரு யானைத் தந்தங்களும் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று நண்பகல் இச்சம்பவம் நடைபெற்றது.


யாழ்.பிரதான வீதியில் அதாவது யாழ். பொலிஸ்நிலையத்துக்கு சுமார் 100 யார் தூரத்தில் இத் தொல்பொருட்காட்சிச்சாலை இருக்கிறது.

மினிபஸ் ஒன்றில் வந்த இனந் தெரியாத இளைஞர் கோஷ்டி இக்கொள்ளையில் ஈடுபட்டதாகக்கூறப்படுகிறது.

நிலையக் காவலாளியை, துப்பாக்கி முனையில் தடுத்து வைத்துகொண்டு அலவாங்கு போன்ற ஆயுதங்களால் காட்சிச்சாலையின் கதவை உடைத்து கொள்ளையடித்தனராம்.

1656ம் ஆண்டு தொடக்கம் 1795ம் ஆண்டுவரை டச்சுக்காரர் ஆட்சியின்போது இப் பீரங்கி அவர்களால் பாதுகாப்புக்குப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பீரங்கியின் 4 சில்லுகளில் (6ம் பக்கம் 4ம்கலம் பாரக்க



சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தாக்கப்பட்ட பின்னர், பொலிஸ் நிலையம் இருந்த இடம் தரை மட்டமாக இருப்பதை முதல் படத்திலும்; தாக்குதலின்போது அங்கு காணப்பட்ட யாழ். தொலைத் தொடர்பு நிலையத்தின் லொறியும், மற்றுமொரு வாகனமும் சேதப்பட்ட நிலையிலும். சடலங்கள் தேடப்பட்ட போது குவிக்கப்ப்ட்ட கற்குவியல் ஒன்றையும் இங்கு காணலாம்.

# அமைதி இழந்த சாவகச்சேரி

## பதற்றத்தின் மத்தியில் வழமைக்கு திரும்புகிறது!

(கா. யோகநாதன்)

"சுமார் ஐம்பது அடி உயரமான பலம் வாய்ந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையக் கட்டிடத்தை அங்கு காணவில்லை. அவ் விடத்தில், பொலிஸ் நிலைய அத்திபாரம் மட்டுமே காணப்பட்டது. ஆறு அடி உயரமான தற்பாதுகாப்பு நிலையம் மட்டும் பாதுகாப்புஏதுமின்றி காணப்பட்டது. பொலிஸ் நிலையத்துடன் இணைந்த சமயலறை, விடுதியறைகளும் இடிந்து, சரிந்து, விழுந்த நிலையில்காணப்பட்டன.

நேற்றுக்காலை படப்பிடிப்பாளர் 'தேவா' வுடன், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை பார்க்கச் சென்றிருந்தேன். கைதடிக்குச் சென்ற போது ஒரு சில கடைகள் மட்டுமே திறந்திருந்தது. பதற்ற நிலை இன்னும் அங்கு நீங்கவில்லை அவ் வீதியால், சாவகச்சேரிக்கு கார்களும், மினிபஸ்களும் மட்டுமே செல்லக் கூடியதாக இருந்தது.

கைதடி நுணுவில்வீதியில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் 10அடி ஆழமான குண்டு வெடிப்புகள் காணப்பட்டன. சில குழிகள் வீதி நடுவிலும் காணடபட்டன இதனால், வ. பி. போ ச. பஸ்கள், லொறிகள், அவ்வீதியால் போக முடியாத நிலை இருந்தது சில வ. பி. போ. ச. பஸ்கள், புத்தூர் ஊடாக மீசாலை சென்று அங்கிருந்து சாவகச்சேரிக்குச் சென்றன. சில பஸ்கள் நாவற் (6-ம் பக்கம் 1-ம் கலம்பார்க்க)

## கண்காணிப்பு வலயம் தோல்வியடைந்து விட்டதா

### பாராளுமன்றத்தில் அநுரா கேள்வி

[கொழும்பு]

"தமிழர் விடுதலைக்கூட்டணியினர் பாராளுமன்றத்தில் இருந்துகொண்டே தீவிரவாதிகளை வளர்த்தனர். இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் புலியின் வாலைப் பிடித்துக் கொண்டு எதுவுமே செய்ய முடியாத நிலையிலுள்ளனர்." [6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க]

## உரிமை கோருகிறது

(மதுரை)

தெல்லிப்பழை வறுத்தலைவிளான் வீதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குத் தாங்கள்தான் பொறுப்பு என்று 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை தமிழகத்திலுள்ள பத்திரிகைகளில் (6ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

## "தீவிரவாதிகளை கொல்வதினால் பயங்கரவாதத்தை ஒழிக்கமுடியாது"

### வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் பிரதமர் உரை

(கொழும்பு)

"பல உயிர்களைக் கொன்று குவிப்பதன் மூலம் நாட்டைத் துண்டாடித் தனி அரசை அமைக்கமுடியாது அதே போன்று தீவிரவாதிகளைக் கொல்வதின் மூலம் பயங்கரவாதத்தை ஒழிகமுடியாது"

இவ்வாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா, பாராளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து (6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல்:

## தீவிரவாத இளைஞர் பலி இருவர் படுகாயம்

[புதுடில்லி]

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது தீவிரவாத இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், இரு இளைஞர்கள் பலத்த காயமடைந்ததாகவும் தமிழீழ விடுதலை இயக் [5-ம் பக்கம் 5-கலம் பார்க்க)

## வடபகுதியில் மட்டும் இன்று ஊரடங்கு

[கொழும்பு]

வடபகுதியில் மட்டும் இன்று ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்குமென்று தேசிய பந்தோபஸ்து அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இன்று பிற்பகல் 2 மணிக்கு அமுலுக்கு வரும் ஊரடங்குச் சட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் தளர்த்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### மன்னார் வவனியாவில்

மன்னார், வவனியா மாவட்டங்களில் இன்று மாலை 6 [6ம் பக்கம் 1ம் கலம் பார்க்க

### வாசகர்கள் கவனத்துக்கு

திடீரென அறிவிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவைத் தொடர்ந்து நேற்றைய 'ஈழநாடு'(23-11-84) இதழ் வெளிவரவில்லைஎன்பதைவாசகர்களுக்குவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— நிர்வாகி

## அடையாளம் காணப்பட்ட பொலிஸார்விபரம்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவத்தில் பலியான 27 பொலிஸாரில் 24பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மூவரின் சடலங்களில் தலை துண்டிக்கப்பட்டுவிட்டதால் அடையாளம் காண முடியவில்லையாம்.

அடையாளம் காணப்பட்ட (6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெருவில் கிணற்றுடன், 4 பரப்புக் காணி முழுமையாகவோ, பகுதியாகவோ உடன் விற்பனைக்குண்டு. N. ஜெகதீசன், 43, செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (852)

இருபாலையில் 'சுருகன்வயல்' அல்லது 'கல்லுட்டி' எனப்படும் நாற்பது பரப்பு நெல் வயல் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. சிற்றம்பலம், பன்னாலை, தெல்லிப்பளை (807)

கொழும்புத்துறையில் உபதபாற் கந்தோர், மகாவித்தியாலயம் அருகில் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக சச்சேரி, சுண்டிக்குளி, சென்ற் ஜோன்ஸ் கல்லூரிக்கு ½, ¾ மைல் தூரத்தில் 3½ பரப்பு குடியிருக்கக்கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு. இரு பக்க பாதை கொண்டது. தொடர்பு: நாகேஸ்வரி (டீச்சர்), கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு. (836)

ELF 350 லொறியும் (மூடிய பொடியுடன்) 7/9236 இலக்கமுடைய 404 காரும் விற்பனைக்குண்டு 'திருமகள் அரிசி ஆலை' சி. எஸ். கே. ஸ்தாபனம் 133, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். 819

புத்தம்புதிய 7·5 ஜன்மார் ஜெனறேற்றர் விற்பனைக்குண்டு. காலை 9-00 மணி - மாலை 5-00 மணிவரை பார்வையிடலாம். தொடர்பு: முகாமையாளர் யாழ். தனியார் வைத்தியசாலைகள், 395 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 30

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

திருகோணமலை, பிரதான வீதி, 333-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தசாமி நடேசன் என்பவரின் மரணசாதனமில்லாச்சொத்துக்கள் விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல: 578

திருகோணமலை, பிரதான வீதி, 333 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கந்தசாமி நடேசன் கைம்பெண் செல்வம்.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

எனவே அக்கறையுள்ள எவரேனும் 1984ம்-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ஆம் திகதி காலை 9 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன்முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணமேதுமிருப்பின் அவற்றைத் தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்

நீதிமன்றக் கட்டளைப்படி,

**கா. மகேந்திரராசா,**
பதிவாளர்.

1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ஆம் நாள். 847

## தேவை

அதிகாலையில் பத்திரிகை விற்பனை செய்யவும், புத்தகங்கள் விற்பனை செய்யவும் முற்பணம் கட்டக்கூடியவர்கள் நேரில் வரவும். அன்புஜீ புத்தக நிலையம், 248/9, கே. கே எஸ். வீதி யாழ்நகர். 842

மின் தறி இயக்குநர்கள் (பெண்கள்) உடன் தேவை நேரில் தொடர்பு கொள்ளவும். ஏ. ஜெராட், டாக்டர் சுப்பிரமணியம் வீதி அந்தோனியார் கோவில் முன்பாக, சுன்னாகம். 834

## வாடகைக்கு

சகல வசதிகளும் பொருந்திய சி. எஸ். கே. இரண்டாம் கடைக் கட்டடத்தில் உள்ள கடைகள் இரண்டு வாடகைக்குண்டு. மேல் மாடியிலும் கடைகள் கட்டவுள்ளோம். தொடர்பு கொள்ளவும்: உரிமையாளர், சி. எஸ். கே. யாழ்ப்பாணம் 820

மானிப்பாய் சந்தையில் பிரதான வீதியில் உள்ள இரண்டு கடைகள் வாடகைக்கு விடப்படும். தொடர்பு: சி சிவலிங்கம் சிவசுந்தரி ஸ்ரோஸ், No 2, மத்திய சந்தை, மானிப்பாய். 849

மருத்துவ பீடத்திற்கு அண்மையில் வளாக மாணவிகளுக்கு சாப்பாட்டு வசதிகளுடன் தங்கும் இடம் உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் தொலைபேசி: இல. 22752, அல்லது வீடியோ புளசம்ஸ், 30 சிவப்பிரகாசம் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 839

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

திருகோணமலை, தபாற் கந்தோர் வீதி, 125-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவசம்பு சச்சிதானந்தம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்கள் விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல: 577

திருகோணமலை, தபாற் கந்தோர் வீதி, 125ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சச்சிதானந்தம் கைம்பெண் இராசயோகினி, —மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எனவே அக்கறையுள்ள எவரேனும் 1985-ஆம் ஆண்டு தை மாதம் 11-ஆம் திகதி காலை 9 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணமேதுமிருப்பின் அவற்றைத் தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்கள்.

நீதிமன்றக் கட்டளைப்படி

**கா. மகேந்திரராசா,**
பதிவாளர்

1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19-ஆம் நாள். 846

## யாழ்ப்பாணம் அக்கடமி க. பொ த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985 மீட்டல் வகுப்புகள்

85ம் ஆண்டு பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் 3-12-84ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றுக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

**எம்மிடம் பயின்ற மாணவர்களின் பெறுபேறுகள் எமது பயிற்றும் திறமைக்குச் சான்றுகும்.**

அதிபர்.

தொலைபேசி எண்: 22617.

376, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 826

## அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம், பருத்துத்துறை.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற வழக்கு

இல: 1253 / நாலுவிதம்

யாழ் / நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்குத் தேவையான பின் அட்டவணையில் காட்டப்பட்ட காணி அரச சுவீகரித்தல் சம்பந்தமாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எடுத்த நடவடிக்கையின் பெயரில் காணியின் உரிமையாளருக்கு வழங்கப்படவேண்டிய தொகையில் ஒரு பகுதியாக அதற்கு உரித்துடைய நெல்லியடி, கரவெட்டியைச் சேர்ந்த சின்னம்மா சுந்தரம்பிள்ளை காலமாகிய காரணத்தால், நஷ்ட ஈட்டுத் தொகையாகிய ரூபா மூவாயிரத்து அறுநூற்றுப் பன்னிரண்டு சதம் தொண்ணூற்றுறும் (ரூ 3612-96) அதற்குரிய வட்டியாகியரூபாமூவாயிரத்து நூற்றுப் பதினறு சதம் பதினேழும் [ரூ. 3116-17] மொத்தம் ரூபா ஆறுயிரத்து எழுநூற்று இருபத்தொன்பது சதம் பதின்மூன்றை ரூ.6729-13) குறிப்பிட்ட யாழ். மாவட்ட அரசாங்கஅதிபர் இத் தொகைக்கு உரித்துடையவருக்கு வழங்கும்படி மேற்படி வழக்கில் இம் மன்றில் செலுத்தியுள்ளார்.

இப்பணத்திற்கு உரிமை கோரி இறந்தவரின் மகனுகிய சுந்தரம்பிள்ளை சண்முகநாதனின் மனைவியும், அவரால் தத்துவம் வழங்கப்பட்டவருமாகிய பரமேஸ்வரி சண்முகநாதன் மன்றுக்கு மனுச்செய்துள்ளார். அவரது விண்ணப்பம் மன்றினுல் பரிசீலனைசெய்யப்பட்டு இபபணத்தை அவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இப் பணத்தை அவருக்கு வழங்குவதற்கு மாறுக எவருக்காயினும் காரணம் யாதேனும் இருப்பின் அக்காரணங்களை நேரிலோ அல்லது அவரது சட்டத்தரணிமூலமோ 1985ம் ஆண்டு தை மாதம் 3ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இம் மன்றுக்குத் தெரியப்படுத்தவும் தவறின் இத்தொகை விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும்.

1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14-ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி

**றிச்சேட் ஜெயராஜசிங்கம்,**
பதிவாளர்

### மேற்குறிப்பிட்ட காணியின் விபரம்

வடமாகாணம யாழ்ப்பாண மாவட்டம் வடமராட்சி உதவி அரசாங்க அதிபரின் நியாயாதிக்க எல்லைக்குள் அடங்கிய கரவெட்டி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 'தேவரவைக்கல்' என்னும் காணி. இதன் விஸ்தீரணம் 1றூட் 20.2பேர்ச். இது தாடர்பான வரைபடத்தின் இலக்கம் பி. பி. எ. 2171.

வரைவு:-
மனுதாரின் சட்டத்தரணி.

**வ. மகாலிங்கம்,** 818

## உ
## திருமணம்

| திரு. ஏ. நாகரத்தினம் தம்பதிகளின் (உரிமையாளர் குகன் ஸ்ருடியோ பருத்தித்துறை) புதல்வன் செல்வன் **குகநேசனுக்கும்** | திருமதி கே. பொன்னம்பலத்தின் புதல்வி செல்வி **உமாதேவிக்கும்** |
|---|---|

இன்று 24ம் திகதி லண்டனில் திருமணம் நடைபெறவுள்ளது. உற்றூர், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம். 853

## ஆண்டு விழா
### யாழ். சீயோன் தேவாலயம்

| | |
|---|---|
| இடம்: | யாழ். மாநகரசபை மண்டபம் |
| காலம்: | 25 11 84 |
| நேரம்: | காலை 9 00 மணி |
| செய்தியாளர்: | சங். அலன் றிச்சட்சன் (இங்கிலாந்து) |

யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**முக்கிய குறிப்பு:**

புதிய ஆலய கட்டிடத்திற்கான வேலைகள் நடைபெற்று வருவதால் ஞாயிறு காலை ஆராதனைகள் தற்பொழுது யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெறுகிறது.

**போதகர், "சீயோன் தேவாலயம்",**
24, இராமையா செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (850)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
கனகம்மா
பத்மநாதன்

மலர்வு:
5-9-1930

உதிர்வு:
24-10-1984

எங்கள் அன்புத் 'தெய்வமே' எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்றுலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்

25-10-84இல் நடைபெற்ற இறுதிக்கிரியையில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பி ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்

**இ. பத்மநாதன் (அன்புக் கணவன்),**
ப முரளீதரன், ப. முகுந்தன், ப. சுகந்தி, ப ஷாமந்தி.
3-ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. (837)

## முக்கிய அறிவித்தல்
## மின் விநியோகம்

1984-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி சனிக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் 8-30 மணி வரையிலும் பின்னர் மாலை 5-00 மணி தொடக்கம் 5-30 மணி வரைக்கும், மறுநாள் 1984-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ம் திகதியன்று காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரைக்கும் முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு யாழ்ப்பாணம் 132 கே வி மின்மார்க்கம் அனுராதபுரத்திலிருந்து தடைசெய்யப்படவிருப்பதால், சுன்னுகம், காங்கேசன்துறை வேலணை, கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முல்லைத்தீவு, துணுக்காய் போன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி — யாழ் பிரதேசங்களின் பெரும்பாலான பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

**மின் பொறியியலாளர்,**
இலங்கை மின்சார சபை,
யாழ் பிரதேச அலுவலகம்,
சுன்னுகம்.

848

### மணிவாக்கு

பணம் நமக்குப் பெற்றுத்தருவதெல்லாம் சோறும் கறியுமாகும்; பணத்தையே உன்னுடைய உயிரும் உடலுமெனவோ உனது ஒரே குறியும் நோக்கமுமெனவோ கருதாதே. —ஸ்ரீராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

# 'ஊரடங்கு' வாழ்வு

'பச்சைத் தண்ணி'ப் பட்ஜெட்டிற்கு எத்தனை வாக்கெடுப்புக்கள் நடத்தினுலும்மக்கள் பரவாய் பண்ணுவதில்லை என்ற நிலை நாடெங்கிலும் பரவலாய் காணப்படுகிறது.

சபையிலேயே அமைச்சர்கள், அரசதரப்பு எம். பிக்கள், மெலிந்த தொகையுடைய எதிர்க்கட்சி உறுப்பினர் சமுகமளிக்கவோ, விவாதத்தில் பங்குபற்றவோ மனமற்றிருக்கும்போது இதற்கு வேறென்னசான்று தேவை?

இதனைக்கூட ஒரு பிரமாதமான சாதனையென்று அரசபத்திரிகைகள் சொல்வதானல் இவற்றை வாசித்து நம்பும் மனித பதர்கள் இந்த நாட்டில் உண்டென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

கடந்த இரண்டாவது உலக மகாயுத்தத்தில் உணவுப் பங்கீடுமுறை ஆரம்பமாவதற்கு நாம் இறக்குமதிக் கப்பல்களை நம்பி வாழ்ந்ததே காரணம்.

சுமார் 30 வருடங்களுக்குப்பின் இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பொருள்களில் முற்ருகத் தன்னிறைவுகாண முடியாவிட்டாலும் மிக அத்தியாவசியமான தேவைகள் ஓரளவிற்கு நாட்டில் கிடைக்குமளவிற்கு விவசாய உணவு அமைச்சுக்கள் செயற்பட்டிருககின்றன.

தாராளமான பொருளாதாரக் கொள்கையின் நன்மை தீமை பற்றி நாம் இங்கு வாதாடவில்லை. அதன் காரணமாக எங்கள் பொருளாதாரம் இன்றும் இறக்குமதியில் பெருமளவு தங்கியிருப்பதைக் குறிப்பிட வேண்[illegible], கண்டிக்கவும் வே[illegible].

''க[illegible]பலிலிருந்து வா[illegible]' எட்டும் பொருளாதாரத்தின் அபாயம் குறைய அதிலும் மோசமான ''ஊரடங்கு'' வாழ்வு சிலவருடங்களாகத் தலையெடுத்திருக்கிறது.

இந்தப்புதிய துன்பமே மககளுக்கு இன்று பழம் பாடமாகின்றது.

ஆனல் இதன் படிப்பினையை மக்கள் உணர்ந்தபாடில்லை.

ஒருநாள் ஊரடங்கானலும், அடுத்தநாள் விடியற்காலை ஒவ்வொரு சிறுகடையிலும் கூடும் மக்கள் ஒரு பெரும் தேர்த்திருவிழா காணும் கூட்டம்.

இந்த நிலை — 'ஊரடங்கு' வாழ்வு — இன்னும் நெடுங்காலம் நீடிக்கலாம்; ஆனல் இதில் வெளியாகும் எங்கள் அவலநிலை நீடிக்கப் போகிறதா?

மனிதப்பிறவியை மேனட்டாருமே ஒரு ஞானப்பிறவி (homo sapiens) என்று கருதிவந்திருக்கின்றனர்.

தொழிற்புரட்சி யென்ருரு சனியன் பிடித்த காலம் தொட்டு இன்று வரைக்கும் ஒரு தொழில் நுட்பயுகம் பற்றி ஓயாது பேசப்படுகிறது, மேனட்டின 'நன்கொடை' இது.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மூலம் உலகம் எத்தனையோ அற்புத சாதனைகளைக் கண்டிருக்கிறது.

அதில் ஒன்று தான் நாம் குறிப்பிடும் மனிதப்பிறவியில் ஏற்பட்ட தீவிரமாற்றம்.

''புத்தி ஜீவியாகவாழவேண்டிய இன்றைய சாதாரண மனிதன் ஒரு பொருளாதார; ஜீவியாக (homo economicus) மாறி விட்டான்'' என்கிரு[illegible] இன்றைய பிரபல சமுதாயத் தத்துவ மேதை ஐவன் இல்லிக் (Ivan Illick) என்பவர்.

தாம் செய்யும் தொழிலே தெய்வமென்பதும்; ஊதியம் மட்டுமல்ல; ஆன்மீக திருப்தியும் உண்டாக வேண்டுமென்று இன்றைய மனிதன் எண்ணுவதில்லை. எமக்கு அத்தியாவசியமான பொருள்களை உண்டாக்குவதில் எவ்வித சிரமமும் எடுப்பதில்லை என்கிருர் இப்புதுவித சிந்தனையாளர்.

கல்விமுறையிலேயே எவ்வாறு மனித தேவைகளை அதிகரிக்கலாம், அவைக்கேற்ற தொழில்களை அதிகரிக்கலாம், அதன் மூலம் பெரிய உத்தியோகங்களை வகிக்கலாம் என்ற அத்திபாரக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இன்றைய பாடசாலைக் கல்வி மட்டுப்படுத்தி அதன் பல அம்சங்கள் தேவையற்றதாகக் கருதப்படவேண்டுமென்பது அவருடைய தீவிரவாதம்.

எமக்கு இன்று பொருத்தமான சிந்தனை ஒன்றை மிகச் 'சிம்பிளாக' விளக்குகிருர்.

நான்வீட்டில் ஒரு சிறு தோட்டம் செய்கிறேன்; தக்காளி மட்டுமல்ல, வேறு சில பழவகைகள் அதில் உண்டு. ஒரு பழுத்து நிறத்த சிவததப் பழததைப் பிடுங்கி அதன் அழகை ரசித்து இது என்படைப்பென்ற மனத் திருப்தியுடன் அதனைச்சாப்பிடுகிறேன்.

பொருளாதார நிபுணர் ஒருவர் என்னுடைய முயற்சி இத்தனை ரூபாய் இத்தனை சதம் நட்டம் பேசுகிறதென்கிருர். கடையில் ஒரு பழத்தின் விலை சில சதங்களே! நாம் புசிக்கும் பழம் ரூபாய்க்கணக்கில் முடிகிறது.

இந்த மனேபாவமே இன்று நாம் எல்லோரும் பாவனையாளர்களாகக் கடையில் தஞ்சம் புக வேண்டியநிலையை உருவாக்கியுள்ளது.

## இசை நிகழ்ச்சி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி இன்ரறக்ட் கழகம் இன்று சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்த விருந்த இசை நிகழ்ச்சி பின்போடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பதற்றநிலைமையை அடுத்து நிகழ்ச்சி பின்போடப்பட்டதாகக் கழகக் செயலாளர் தெரிவித்தார்.

### வருகிற இந்தியப் பொதுத்தேர்தல்

# ரஜீவ்காந்தியின் தலைமைக்கு ஒருசோதனையா, சாதனையா?

இந்திய பாராளுமன்றத்துக்குப் புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத்தேர்தல் அடுத்தமாதம் 24-ந் திகதி நடைபெறவிருக்கிறது. பாராளுமன்றத் தேர்தலுடன் பல மாநிலங்களின் சட்டசபைகளுக்கும் தேர்தல் நடைபெறவிருக்கிறது. திருமதி இந்திரா காந்தியின் மறைவின்பின் பிரதமர் பதவியை ஏற்றுள்ள ரஜீவ் காந்தி பாராளுமன்றத்தை இரண்டு மாதம் முன்னதாகவே கலைத்து புதிய தேர்தலை நடத்துவதற்கு முன்வந்துள்ளமைக்கு என்ன காரணம்?

### நேருவுக்குப் பின் யார்?

நேருவுக்குப் பின்னர்?

இந்தக் கேள்வி நேரு வாழ்ந்தபோதுஇந்தியாவிலும் உலக நாடுகளிலும் கேட்கப்பட்டு வந்த கேள்வி.

நேருவிடமே பலர் இக்கேள்வியைக் கேட்டனர்.

ஜனநாயகத்தில் வாரிசு எவரும் நியமிக்கப் படுவதில்லை என்று நேரு பதிலளித்து வந்தார்.

மகள் இந்திராவை தமது வாரிசாக்குவதற்குநேரு தயார் செய்கிருர் என்ற குரலும் இந்தியாவில் சில எதிர்க்கட்சி வட்டாரங்களில் இலேசாக ஒலிக்கத்தான் செய்தது.

பிரதமர் நேரு காலமானதும் இந்திய அமைச்சரவை அவசரமாகக் கூடி ஆலோசித்தது பின்னர் சிரேஷ்ட அமைச்சரான தொழில் அமைச்சர் திரு. குல்சாரிலால் நந்தா காபந்துப் பிரதமராக நியமிக்கப்பட்டார்!

நேருஜியின் இறுதிக் கிரியைகள் முடிவடைந்தபின்னர் காங்கிரஸ் பாராளுமன்றைக் கூடி அதன் புதிய தலைவராக திரு. லால்பகதூர் சாஸ்திரியைத் தெரிவு செய்தது

நேருவுக்குப் பின் யார் என்ற கேள்விக்கு சாஸ்திரி என்ற பதில் வந்தது.

### சாஸ்திரிக்குப் பின்

இலங்கையுடன் நட்புறவை விரும்பிய திரு. சாஸ்திரி இலங்கைப் பிரதமர் திருமதி. சிறிமா பண்டாரநாயக்காவுடன் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் சம்பந்தமாக ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

பாகிஸ்தானுடனும் பகைமையை வளர்த்துக்கொள்வது நவ்லதல்லவெனக் கருதிய திரு. லால்பகதூர் சாஸ்திரி சோவியத்தின் நல்லெண்ண உதவியுடன் பாக். ஜனதிபதி பீல்ட மார்ஷல் அயூப்கானுடன் மாஸ்கோவில் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். அந்த மைகாயு டின்னரே அன்ரறிவே திரு சாஸ்திரி காலமானர்.

இதன்பின் இந்தியப் பிரதமராக திருமதி இந்திராகாந்தி பதவியேற்ருர்.

### நேருஜியால் முடியாததையும் இந்திராவால்-

நேருவுக்குப்பின் யார் என்ற கேள்விக்கு இப்போதுதான் சரியான பதில் கிடைத்தது என்று மக்கள் திருப்தியடைந்தனர்

நேருஜிகூடச் செய்யமுடியாத சாதனைகளை மகள் இந்திராகாந்தி நிலைநாட்டிவிட்டார் என்று இந்திய மக்களும் உலகநாடுகள் பலவும் வியப்படைந்ததும் உண்டு!

ஆனலும் சில தீவிர நடவடிக்கைகளினலும் அதிகாரிகள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததினல் ஏற்பட்ட நிலைமைகளாலும் ''ஆட்சி பீடம் என்ன குடும்பச் சொத்தா?'' என்று எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்ததாலும் சுதந்திரம் கிடைத்ததிலிருந்து ஒரேகட்சியும் ஒரேகுடும்பமும் தானே ஆட்சிக்கு வந்துள்ளன வென்ற பிரசாரத்துக்கு இந்திராவின் தீவிரம் இடமளித்ததாலும்ஒரு மாறுதல் ஏற்பட்டது. 1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இந்திராகாந்தியும் காங்கிரஸ் கட்சியும் தோல்வியடைந்தது.

திரு. மொரார்ஜி தேசாய் பிரதமரானர் பல்வேறு கொள்கைகளையுடையவர்களைக் கொண்டு திரு.ஜெயப்பிரகாஷ் நாராயண் முயற்சியால் உருவான ஜனதாக்கட்சி ஆட்சிக்கு வந்தது!

இந்தக் கூட்டுக்கட்சி அரசு இந்திராவையும் மற்றையோரையும் பழிவாங்குவது பற்றிய சிந்தனையிலும் செயலிலும் காலத்தைக் கடத்தித் தங்களுக்குள்ளேயே மோதிக் கொண்டு சிதறியதால் ஆட்சி கவிழ்ந்தது.

இரண்டு வருடங்களுடன் அவர்கள் ஆட்சி நிர்வாகம் முடிந்தது. 1980 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ''போதும் போதும் தாயே' நீயே மீண்டும் ஆட்சி நிர்வாகத்தை ஏற்றுக்கொள்' என்று இந்திய மக்கள் மீண்டும் இந்திராவைத் தெரிவு செய்தார்கள்.

### எஸ். எம். ஜி

பலபிரச்னைகளையும் நெருக்கடிகளையும் சாதுர்யமாகவும் சமர்த்தியமாகவும் சமாளித்து இந்தியாவின் குரல் மீண்டும் உலகில் தனியிடத்தை வகிக்கச் செய்தார் இந்திரா.

உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் ஜனநாயகம் நிலைபெறும் என்பதை நிரூபித்த அன்னை இந்திரா அடுத்த வருட ஆரம்பத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஆயத்தமாக ஏற்பாடுகள் செய்து வந்தார்.

1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் [illegible]0 ஆம் தேதியுடன் இந்தியப் பாராளுமன்றத்தில் ஆயுட்காலம் முடிவடைகிறது. அடுத்தபாராளுமன்றத்துக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்குத் தேர்தலை நடத்த இந்திரா தயார் செய்து வந்தார்.

### தேர்தல்பறறி எதிர்க்கட்சிகள்

பொதுத் தேர்தலை திருமதி இந்திரா இப்போது நடத்த மாட்டாரென்றும் ஏதாவது காரணம் காட்டி தேர்தலை ஒத்திவைப்பாரென்றும் எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் சமயத்தில் ஏதாவது 'ஸ்ரண்ட் செய்து' தாம் வெற்றி பெறுவதற்கு வழி வகுப்பாரென்றும் பாகிஸ்தான் பற்றி அவர் சமீபகாலமாகப் பேசிவருவதற்கு இதுதான் காரணமென்றும் சில எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் விமரிசித்தன!

சீக்கியரின் பொற்கோயில் விவகாரத்தில் இந்திரா அமைதியுடனிருந்த போது இந்திராவைக் கண்டித்த எதிர்ககடசிகள் பதவியைவிட்டு விலக வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தன.

பொற்கோவில் விவகாரத்தில் மிகச்சாவதானமாக நடவடிக்கை எடுத்தபோதும் சிலர் அதைப் பராட்டிய போதும் எதிர்க்கட்சிகள் பலவும் அது பற்றி வெளிப்படையாகக் கருத்து வெளியிடத் தயங்கின!

சென்ற ஒக்டோபர் முப்பத்தோராம் தேதி கொலைவெறியர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு அன்னை இந்திரா பலியானர்.

### இந்திராவுக்கு பின் யார்?

இந்திராதான் இந்தியா என்ற நிலை இருந்தபோதிலும் இந்திராவுக்குப் பின் யார் என்ற கேள்வி எழுந்ததில்லை.

இந்திராவுக்கு நீண்ட ஆயுள் என்று இந்திய மக்கள் கருதினர்களோ அல்லது இந்திராவின் மறைவை சித்தித்துப் பார்க்கக் கூட அவர்கள் விரும்பவில்லையோ!

ஆனல் இந்திரா தனது இளைய மகன் சஞ்சேயைத்தான் தனது வாரிசாக உருவாக்கி வந்தார். அவரது திடீர் மறைவின் பின் மூத்த புதல்வன் ரஜீவைத் தனதுவாரிசாக உருவாக்கி வருகிருர் என்று எதிர்கட்கிகளும் பத்திரிகைகளும் கருத்து வெளியிட்டு வந்தன.

அது சரியோ தவருே இந்திரா மறைந்ததும் நாட்டில் தோன்றிய நெருக்கடி நிலையில் புதிய பிரதமராக இந்திராவின் புதல்வன் ரஜீவ் காந்தியைத் தெரிவு செய்த இந்தியா அமைச்சரவையையும் காங்கிரஸ்பாராளுமன்றக் குழுவையும் காங்கிரஸ் நிர்வாக சபையையும் பாராட்ட வேண்டும்.

### ரஜீவ் யார் என்பது தெரிந்தது!

வயதில் இளையவர் ஆனலும் உறுதி மிக்கவர் என்பதையும் அமைச்சராகக் கூடப் பதவி வகித்து அனுபமில்லை யானலும் ஆற்றல் நிறைந்தவர் என்பதையும் ரஜீவ் காந்தி நிரூபித்து விட்டார்.

நாட்டில் தோன்றிய கலவரங்களை ஒரு சில தினங்களுக்குள்ளேயேகட்டுப்படுத்தி நாட்டில் அமைதியை நிலைநாட்டிவிட்டார்!

இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்காவது பொதுத் தேர்தலைக் கடத்தியிருக்கலாம் ஆனல் அடுத்த மாதமே பொதுத் தேர்தலுக்கு தேதி குறித்தாயிற்று.

### அனுதாபம் தேவையா?

இந்திராவின் அனுதாபத்தில் தேர்தலில் வெற்றிபெறலாமென்ற யுக்தி இதுவென்று சொல்லமுடியாது இரண்டு மாதங்களுக்குட்பின் வரவேண்டிய பொதுத்தேர்தலை ஒரு மாதத்துக்குமுன் நடத்தித் தாம் ஆட்சிப்பொறுப்பை ஏற்பதற்கு மக்களின் கட்டளையைப் பெறவேண்டுமென உண்மையான ஜனநாயகப்பண்பும் மக்களைச் சந்திப்பதற்குள்ள துணிவுமே இதற்குக் காரணம்என்று சொல்லவேண்டும்.

எதிர்க்கட்சிகள் இன்னமும் கூட்டணி அமைத்துக்கொள்வதிலேயே காலம் கடத்திக் கொண்டிருக்கின்றன பொதுத் தேர்தல் நிச்சயமாக ஜனவரியிலாவது நடைபெறுமெனத் தெரிந்திருந்தும் ஒரு கொள்கைத் திட்டத்தை வகுத்து ஓர் அணியாகத் திரளமுடியாத நிலையில் எதிர்க்கட்சிகள் இருக்கின்றன

இந்நிலையில் எதிர்க்கட்சிக் கூட்டணி உருவானலும் பழைய நிலையை நினைத்தும் புதிய இளையதலைமையை விரும்பியும் இந்தியமக்கள் ரஜீவ் தலைமையில் காங்கிரசையே ஆட்சிக்குத் தெரிவுசெய்வார்களென்று எதிர்பார்க்கலாம்.

# இந்திரா கொலையில் லிபியாவுக்கு எதுவித தொடர்புமில்லையாம்!

## லிபியா வெளிநாட்டமைச்சு தகவல்

திரிப்பொலி, நவ. 23 இந்தியப் பிரதமர் திருமதிஇந்திரா காந்தியின் படுகொலையில் லிபியாவுக்கு எதுவித தொடர்புமில்லை என்று லிபிய வெளிநாட்டமைச்சர் லிபியாவுக்கான இந்தியத்தூதுவரிடம் கூறினார்.

இந்திரா காந்தியை லிபியத் தலைவர் கேர்ணல் கடாபியின் கையாட்களே கொலை செய்தனர் என்றும், வேறுபல உலகத்தலைவர்களையும் கேர்ணல் கடாபி கொலை செய்யத்திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக்குற்றச்சாட்டுக்களுக்கு லிபிய அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளதுடன் இவை குறித்து ஆட்சேபமும் வெளியிட்டுள்ளது

இந்தியா - லிபிய உறவுகள் இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் மிகத்திருப்தி கரமாக இருந்தன வென்றும் லிபிய வெளிநாட்டமைச்சு தெரிவித்தது.

லிபியத்தலைவர் கேர்ணல் கடாபியின் பாரியார் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை லிபியாவுக்கு விஜயஞ் செய்யும்படி அழைப்பு விடுக்க புதுடில்லிக்கு கடந்த ஆண்டு சென்றிருந்ததையும் இவ்வமைச்சு ஞாபகப்படுத்தியது. (கி)

ஆயுதபரிகரணம் பற்றி

# ஷுல்ஸ், குரோமிக்கோ அடுத்தாண்டு ஆரம்பத்தில் பேச்சு!

வாஷிங்டன், நவ. 23 அடுத்தாண்டு ஜனவரியில் சோவியத் வெளிவிவகார அமைச்சர் திரு. அந்ரே குரோமிக்கோவும், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. ஜோர்ஜ ஷுல்சும் ஆயுதப்பரிகரணப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இப்பேச்சுக்கள் 85ம் ஆண்டு ஜனவரி 7ம், 8ம் திகதிகளில் ஜெனீவாவில் இடம்பெறும் இரு ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விருவருக்குமிடையிலான ஆயுதபரிகரணப் பேச்சுக்கள் முரண்பாடுகள் பல காரணமாக முறிவடைந்திருந்தது.

திரு. றீகன் இப்பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக விருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். சோவியத்தின் கிரெம்ளின் ஆட்சிப் பீடமும் பேச்சுக்கள் நடைபெற விருப்பதனை வரவேற்றுள்ளது.

ஆயுதக் கட்டுப்பாடுகள், அணுஆயுதங்களை கட்டுப்படுத்துதல் ஆகியன சம்பந்தமான பேச்சுக்களுடன் விண்வெளியில் இராணுவ சாதனங்களை நிறுத்துவதைக் குறைப்பது குறித்தும் ஆராயப்படும் என்று கூறப்பட்டது.

இப்பேச்சுக்கள் ஆரம்பமாவது குறித்து அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் எவ்வளவு காலம்வரை நீடிக்கு மென்பது குறித்து எதுவும் தெரிவிக்கப் படவில்லை. [கி]

# இந்திய அந்தாட்டிக்குழு டிசம்பரில் பயணம்!

புதுடில்லி, நவ 23 பனிபடர்ந்த அந்தாட்டிக் இந்திய 'அந்தாட்டிக்' துருவத்துக்கு ழுக்குழு பனிக் ஆராய்ச்சிக்குழு டிசம்பர் 4ந் கட்டிகளை ஊடுருவும் விசேட திகதி அங்கு பயணமாகிறது. (5-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)




# உலகமேடை

## வாஷிங்டன்

### கிழக்கு—மேற்கு உறவு

ஐக்கிய அமெரிக்காவும் மாஸ்கோவும் இவ்வருட இறுதியில் ஒரு புதுகல சார ஒப்பந்தம் கைச்சாத்திடுவார்கள் என்று மேற்கு நாடு ராஜதந்திரிகள் நம்பிக்கைகொண்டுள்ளனர். இவே 1980க்குப் பின் முதலாவது ஒரு வல்லரசுகளின் ஒப்பந்தமாயிருக்கும்.

சோவியத் ரஷ்யா எங்கள் கருத்துக்களை நன்ருகப் புரியத்தொடங்கிவிட்டனரென்று ஒரு உயரிடத்து அமெரிக்க தகவல் தெரிவிக்கிறது.

## அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவின் சமஷ்டி ஆட்சி பொதுத் தேர்தல் ஒரு மாதத்தில் நடக்கவிருக்கிறது. இன்றைய தொழிற்கட்சித் தலைவர் பிரதமர் ஹொக் வருகிற தேர்தலிலும் அமோக வெற்றியீட்டுவரென்ற நம்பிக்கை சடுதியாகக் குலைந்துவிட்டது. காரணம், அவருடைய ஆட்சியின் ஊழல்களை விசாரித்த பிருங் கொஸ்ரிகன் கமிஷன் பல பாரதூரமான மோசடிகளைக் கண்டு பிடித்து அறிக்கையில் பிரசுரித்திருக்கிறது.

இதனை வெளியிட்டால் தேர்தலுக்கு முன் பாதகமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்ற காரணத்தால் அது வெளிவரவில்லை. அவருக்கு எதிராகப் போட்டியிடும் லிபரல் கட்சித் தலைவர் அன்ட்று பீகெகக் இன்றைய பிரதமரைப்போல மக்கள் கவர்ச்சி உடையவரல்லர். இருந்தும் இன்றை ஆட்சியில் ஊழல் நிரம்பியிருப்பதால் பிரதமர் ஹொக் அமோக வெற்றிஎடுப்பது சந்தேகம்.

## பிரிட்டன்

8 மாதங்களாக இழுபறிப்படும் நிலக்கரிச்சுரங்க வேலையாளர் வேலைநிறுத்தம் முடிந்தபாடில்லை. இதுவே பிரிட்டிஷ் வரலாற்றில் மிகநீண்டகால வேலைநிறுத்தம். பிரிட்டனில் உள்ள 174 சுரங்கங்களில் 119ல் எவ்வித கரியும் உற்பத்தியாகவில்லை. ஒருசிலர் வேலைக்குப் போகிறதால், அது வேலைநிறுத்தத்தைப் பாதிக்காது.

அரசாங்கம் திடமாக நிற்பதுக்கு இச் சிறு உற்பத்தியும், இறக்குமதியும் கையிருப்பும் இந்த மாரி காலத்துக்குப் போதுமென நம்பப்படுகிறது.

சுரங்கத் தொழிலாளர் தலைவர் இரகசியமாக சோவியத்யூனியன் சுரங்கத் தொழிலாளர் சங்கம் போன்ற சில சோஷலிச நாடுகளின் தொழிற்சங்கத் தலைவர்களைச் சந்தித்து பேசியபின் லிபியாவின் கேணல் கடாபியின் ஆதரவைப் பெற்றதே பிரிட்டனின் தொழிற்கட்சித் தலைவருக்கு ஆத்திரம் ஊட்டியிருக்கிறது.

பிரிட்டனில் கடாபிக்கு எதிரான போக்கு பொதுவாகக் காணப்படுகிறது. பேச்சுவார்த்தைகள் பலன் அளிக்கவில்லை; சில சுரங்கங்களை தான்தோன்றித்தனமாக மூடியதை சுரங்க தொழிலாளர்சங்கம் கடுமையாக எதிர்க்கிறது. திருமதி தட்சர் மிக இறுக்கமாக நிற்பதற்கு இன்றைய நிலைமை சாதகமாகிறது.

## இஸ்ரேல்

பொருளாதார வீழ்ச்சி அடைந்திருக்கும் இஸ்ரேலுக்கு ஒரு சிறு நம்பிக்கைஒளி கிடைத்திருப்பதுபோல தெரிகிறது.

லெபனுனில் இஸ்ரேல் ராணுவம் ஆதிக்கம்செலுத்துவதை நீக்க, ஜெருசலமும், பெய்ரூற்றும் சேர்ந்து ஒரு வழிகண்டிருப்பதாக நம்பப்படுகிறது.

அரபு மாணவர்கள் இஸ்ரேலிய பயங்கரவாதிகளைக் கொன்று பழிக்குப்பழி வாங்குகின்றனர்

பொருளாதாரத்தில் பணவீக்கம் வருடத்தில் 1000 சத வீதத்துக்கு ஏறியிருக்கிறது.

வரி விலைவாசி, சம்பள ஏற்றம் இவையெல்லாம் தற்காலிகமாக மூன்று மாதத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

– 'உலகம் சுற்றி'.

**ராணி** (யாழ்ப்பாணம்
10-30, 2-00, 4-30
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ். நகர்)
Daily 10-30, 2-00, 4-30
6-15
Jim Gelly—Jim Brown
BLACK BELT JONES
(color)
A Super Action Karate Film
சிறந்த கராட்டி படம்)

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-30, 6-30
**காலங்களில் அவள் வசந்தம்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-15, 4-30 P. M.
SPIDER MAN
STRIKES BACK
(color-karaty-action)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45
இன்று மட்டும்
Brooke Shields
Christopher Atki s
"THE BLUE LAGOON"
கப்பல் விபத்தில் தப்பி ஒரு தீவில் கரைசேர்ந்து வளர்ந்த இரு சிறுர்களின் காதல் காவியம்.
கண்மப்பாக வயதுவந்தவர்கட்கு மட்டும்.

**றீகல்** (யாழ் நகர்)
10-30, 2-15, 4-30
Kirk Douglas......
Anthony Quinn......
Silvana Mangana......
ULYSSES
(Technicolor)

**றீகல் மினி**
10-15, 2-00, 4-30
சிவாஜி... பாக்கியராஜ்..
**தாவணிக்கனவுகள்**

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
2வது கொட்டகை நிரம்பிய வாரமாக யாழ் நகரில் என்றுமே இல்லாதளவு மாதர்கள் பெருந்திரளாக பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கும்
ஓர் திரைப்படம் தான்
K. பாலச்சந்தரின்
**பூவிலங்கு**
(கலர்)
ஏமாற்ற மடையாமல்
இன்றே பார்த்துமகிழுங்கள்

**வின்ஸர்** (யாழ்)
10-30, 2-30, 6-15,
ரஜனிகாந்த்-ராதா-சரிதா சில்க்-தேங்காய்-மனோரமா மூர்த்தி-Y. G. மகேந்திரன்
**சிவப்பு சூரியன்**
(ஈஸ்ட்மன் கலர்)
முற்றிலும் மாறுபட்ட பாணியில் உருக்கமுடன் நடித்து சகோதரபாசத்தை எடுத்துக்காட்டும் ஒப்பற்ற காவியம்!


### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மண்டைதீவு வட்டாரம் 5ஐச் சேர்ந்த காலஞ்சென்ற சற்குரு மன்மதலிங்கம் என்பவரது மரணச்சாதனமற்ற மரணச்சொத்தின் விடயத்தில்.

—மரணமெய்தியவர்

வழ. இல: ரி/3839

சற்குரு சத்தியலிங்கம், வி. ரி. எஸ். லேன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

—மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு தை மாதம் 4ம் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்முன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1984ம் ஆண்டு புரட்டாதி மாதம் 28ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைதல்:
அ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி

824

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

இலக்கம் 15, கோணுவலை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற எம். சங்கரப்பிள்ளை இராஜசிங்கம் என்பவரது மரணசாதனமற்ற சொத்தின் விடயத்தில்.

—மரணமெய்தியவர்

வழ. இல: ரி/3832

திருமதி புவனேஸ்வரி இராஜசிங்கம், இலக்கம் 15, கோணுவலை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

—மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு தை மாதம் 4ம் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்முன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1984ம் ஆண்டு புரட்டாதி மாதம் 4ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைதல்:
அ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி.

823


**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
இன்று முதல்
சிவாஜி-கே ஆர் விஜயா
**தங்கை**


# இன்றைய பலன்

மாதம்—கார்த்திகை
திகதி—9(24-11-1984)
வாரம் சனி
திதி—துதியை பின் இரவு 2-20 வரை
நக்ஷத்திரம்—கேட்டை முன் இரவு 9-11 வரை

மேடம்:- வாய்வுக்கோளாறினால் வேதனைப்படுவீர்கள். உணவுவிடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். விபத்துக்கு இடமுண்டு. அமைதி வேண்டும்.

இடபம்:- களஸ்திரவழியால் பொருள்வரவிற்கு இடமுண்டு காதல் விவகாரங்கள் தலைதூக்கும். கண்ணியமான தினம்.

மிதுனம்:- ஏக்கத்தின்சாயல் தாக்கும் எதிர்பாராதவிதமாகச் சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும். நிதானம் வேண்டும்.

கடகம்:- தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும், சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம்.

சிங்கம்:- தொழில் பகுதியில் புதிய வாய்ப்புகள் ஏற்படலாம் எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்பிதழ் கிடைக்கும்.

கன்னி:- புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும். புத்திரர்களுக்குச் செல்வாக்குப் பெருகும். புதுமையான எண்ணங்கள் வட்டமிடும்.

துலாம்:- எதிர்பாராதவிளைவுகள் மூலம் செலவுகள் அதிகமாகும். கடன்படவும் நேரிடும். பிணிக்கு இடங்கொடாது இருக்கவும்.

விருச்சிகம்:- எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும். உடல் நலம் பாதிக்கப்படலாம். தொழில் விடயத்தில் கவனம் வேண்டும்.

தனுசு:- அதிகாரப் பேறுக்கும் அதிக பொருள் வரவிற்கும் இடமுண்டு ஆக்கப்பணியிலும் அதிகம் ஈடுபடுவீர்கள்.

மகரம்:- சகோதரவழியில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். எதிரபாராத வரவும் உண்டு. உஷாராக இருக்கவேண்டும்.

கும்பம்:- ஆக்கப் பணிகளில் ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவுதாராளமாகக் கிடைக்கும். தாய்வழி மூலம் நற்செய்திக்கு இடமுண்டு.

மீனம்;- நீண்டநாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்கள் உதவி தாராளமாகக் கிடைக்கும். புண்ணிய விருப்பு மேலிடும். புத்திரவழியாலும் சுபமுண்டு.

திருமலை
வே.ரவீந்திரன்


உங்கள் விலைமதிப்புள்ள டி. வி, வீடியோ, றேடியோ போன்ற எலெக்ரேனிக்ஸ், எலெக்றிக்கல் பொருட்கள் பழுதாகிவிட்டதென்ற கவலையா?
உங்கள் குறைகளை நிவர்த்திசெய்ய இத்துறையில் தேர்ச்சிபெற்ற பொறியியலாளர்களைக் கொண்ட 'ஸ்டார் எலெக்ரேனிக்ஸ்'ஐ நாடுங்கள்
**ஸ்டார் எலெக்ரேனிக்ஸ்**
இல: 37/6, 37/7 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**Home Finance Ltd.**
யாழ். நகர மக்களுக்கு ஹோம் பினுன்ஸ் லிமிட்டட்டின் மற்றும் ஓர் புதிய சேவை.
நவீன முறையில் உங்கள் இல்லங்களை அலங்கரிக்க அழகான, உறுதியான FIBRE GLASS வீட்டுத் தளபாடங்களையும்,
* சாப்பாட்டு மேசை கதிரைகள்,
* T. V. மேசை,
* தண்ணீர்த் தாங்கி,
* WASH BASIN,
* TEAPOYS, * CENTRE TABLE,
* VERANDAH CHAIRS
என்பவற்றை ஒருங்கே பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்,
**TRADE CENTRE,**
ஹோம் பினுன்ஸ் லிமிட்.,
155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

UNIQUE COMMUNICATION SERVICE
**யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்**

நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்
**24 மணிநேர சேவை**
யாழ் நகர அலுவலகம்
28/18 - 1-1 மகாதமா காந்தி ரேட்,
(சலுசலவுக்கு அனமையில)
யாழபபாணம்.
ரெலெகஸ - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891
கொழும்பு நகர அலுவலகம
அவுஸதிரேலியா கட்டிடம
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெகஸ.- 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066


## இந்திய
(4ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

கப்பலொன்றில் செல்லும்.

இக்குழுவில் 80பேர் அடங்குவார்கள் இவர்களில் 13 பேர் விஞ்ஞானிகளாவர்; ஏனையவர்கள் உதவியாளர்கள்.

இக்குழுவின் பயணத்தை பிரதமர் திரு. ரஜீவ் காந்தி வரவேற்றுள்ளார்.

மறைந்த திருமதி இந்திரா காந்தியும் இப்பயணம் குறித்து தமது நாட்குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## ரூபவாஹினி

மாலை
- 5-30 'நியூஸ்பைடர் மேன்' கார்ட்டூன் சித்திரம் (ஆங்கிலம்)
- 5-55 சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
- 6-35 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
- 6-55 செய்திகள் (தமிழ்)
- 7-15 'பக் ரோஜகஸ்' (ஆங்கிலச் சித்திரம்)
- 8-15 செய்திகள் (சிங்களம்)
- 8-35 'த ஹெவுண்ட் ஓவ் பஸ்கர் விலெஸ்' துப்பறியும் சித்திரம் (ஆங்கிலம்)
- 9-05 இசை நிகழ்ச்சி (ஆங்கிலம்)
- 9-30 செய்திகள் (ஆங்கிலம்)
- 10-00 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்' துப்பறியும் சித்திரம் (ஆங்கிலம்)
- 10-30 உலகச் செய்திகள்
- 10-35 'ஸ்டார்ஸ்கி' தொடர்ச்சி
- 10-55 நிகழ்ச்சிகள் முடிவு.


## அண்ணமார் ஊர்வலம்
(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை அண்ணமார் புதிய எழுந்தருளி மூர்த்தி ஊர்வலமும், விசேஷ அபிஷேசமும் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

## காவல்
[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்புக்கரு இராணுவத்தினரும் காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தகர்க்சப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி நடவடிச எடுக்கப்பட்டதாகத் தெரிவிச்சப்படுகிறது. (மா)



சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தாக்கப்பட்ட தினம் கைதடி நுணுவில் வீதியில், எரிக்கப்பட்ட வ. பி. போ. ச. பஸ்ஸையும், அவ் வீதியில் சேதமாக்கப்பட்ட வீட்டின் கூரையையும் குண்டு வெடிப்பினுல், அவ் வீதியில் ஏற்பட்ட பத்து அடி ஆளமான குழிகளில் ஒன்றையும் படங்களில் காணலாம்.

# அமைதி இழந்த...

(1ம் பக்க 3ம்கலத் தொடர்ச்சி)
குழி, தனங்கிழப்பு, ஊடாக சாவகச்சேரி சென்றன.

## வேலிகள் எரிப்பு

குண்டு வெடித்துக் காணப்பட்ட வீதிக்குச் சமீபத்தில் உள்ள வேலிகள் எரிக்கப்பட்டிருந்தள. அவற்றில் சில கிடுகுவேலி, மற்றும் சில பனை ஓலை வேலி. ஓரிடத்தில் மின் சாரக்கம்பிகள் அறுந்து தொங்கிக்கொண்டிருந்தன. அதற்கு சமீபத்தில் உள்ள வீட்டின் முன் கண்ணுடி யன்னல்கள் உடைத்து நொருக்கப்பட்டிருந்தன.

மறுபக்கத்தில், புதிய வீடு மேல் கூரை ஓடுகள் எரிக்கப்பட்டிருந்தன. மற்றும் சில வீடுகளும், முற்ருகவும், அரை குறையாகவும் எரிந்த நிலையில் காணப்பட்டன.

யாழ். டிப்போ பஸ் ஒன்று வீதியருகிலுள்ள காணிக்குள் அறைகுறையாக எரிந்த நிலையில் காணப்டட்டது.

இந்த பஸ் வந்துகொண்டிருந்தபோது குண்டுகள் வெடித்ததாகவும், பிரயாணிகள் இறங்கி கால்போன போக்கில் ஓடிவிட்டதாகவும், பஸ் சாரதியும் கண்டக்டரும் சென்றுவிட்டதாகவும், அதன்பின் பஸ் தீக்கிரையாக்கப் பட் ட தா கவும் அப்பகுதியிலுள்ள ஒருவர் தெரிவித்தார்.

## பதட்ட நிலை

சாவகச்சேரி வீதிகளில் சன நடமாட்டம் இருந்தபோதும் இன்னும் பதட்டநிலை நீங்கவில்லை. கூட்டுறவுச் சங்கக் கடையொன்று திறந்திருந்தது. கூட்ட'மாக மக்கள் நின்று கூப்பன் அரிசி வாங்கிக்கொண்டிருந்தனர். வீட்டு வாசல்கள் தே றும் பெண்கள் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தனர். இளைஞர்கள் சைக்கிளில் கூட்டம் கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர்.

## காரை மறித்தனர்

பொலிஸ் நிலையத்தைச் சமீபித்ததும் நாங்கள் சென்ற காரைச் சிலர் தடுத்து, 'ஆமி நிற்கிருர்கள்' என்றனர். சாவகச்சேரியிலிருந்து சைக்கிளில் வந்த ஒருவரை விசாரித்த போது சந்தையில் நிற்பதாகக் கூறினுர். அந்நேரம், 'ஐயோ! ஆமிக்காரர்!' என்றபடி ஒரு பாட்டி ஓடிவந்தார். ஆனுல் எவரும் வரவில்லை. சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தை அடைந்தோம்.

அங்குநூற்றுக்கும்மேற்பட்டவர்கள் பெண்கள், சிறுவர்கள் உட்பட இ டி ந் து வி ழு ந் த பொலிஸ் நிலையத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர் வீதியில் நின்றும், ஒழுங்கையில் நின்றும் இடிந்து விழுந்த கட்டிடத்தையும் பார்த்தனர்.

சுமார் 20 அடி உயரத்தில் பெருங்கற்கள் இரு இடங்களில் குவிக்கப்பட்டிருந்தன. ட்ராக்டர் ஒன்றும் அதன் அருகே லொறியொன்றும், எதிரில் ஜீப்பும், ஒரு மோட்டார் சைக்கிளும் காணப்பட்டது. எங்கு பார்த்தாலும் ம ண் மூடைகளும், கற்களும், மரங்களும், இரும்புத் துண்டுகளும் காணப்பட்டன. மும்மொழிகளில் எழுதப்பட்ட பொலிஸ் நிலையப் பெயர்ப் பலகை முன்பக்கததில் விழுந்துகிடந்தது. 'பொலிஸ்' என இரவில் ப ளி ச் சி டு ம் பெயர்ப் பலகையும் மிக உயரமான 'பைப்' கம்பியும் அதே நிலையில் காணப்பட்டன.

அயல் வீடுகள் எல்லாம் வெறிச்சோடிக்காணப்பட்டது சில வீடுகளில் வீட்டுக்காரர் வந்திருந்தனர். இதற்கு முன்னர் நடந்த தாக்கு த லி ன் போதேஅயலிலுள்ள பலர் வீடுகளிலிருந்து வெளியேறியிருந்தனர்.

பகலில்தான் இங்கு தங்குவோம். இரவில் தங்குவதுவேறு இடத்தில் என்று வீட்டுக்காரர் ஒருவர் தெரிவித்தார்.

'கிணற்றில்குளித்துக்கொண்டிருந்தேன். வெடிச் சத்தம் கேட்டதும் உடுத்திருந்த துவாயுடன் வேலியைக் கடந்து ஓடிவிட்டேன்' என்ருர் ஒருவர் அநேகமாகப் பெண்கள் பகலில் கூட அயல் வீடுகளில் இருப்பதில்லை என்ருர் ஒரு சிறுமி.

வெடித்த சமயம் பின்பகுதியில் உள்ள ஒரு வீட்டில் சாப்பிட்டுக்கொண் டி ரு ந் த ன ர். அரைகுறைச் சாப்பாட்டுடன் கிடைத்த துணிகளுடன் ஓடிவிட்டனர். சிறுவர்கள் சோற்றுக் கிண்ணத்துடன் ஓடினுர்கள்.

## இருவர் பலி!

இச்சம்பவ த் தி ன் போ து பொலிஸ் நிலையத்திற்கு பக்கத்தில் உள்ள ஒரு பெண் பலியானுர். மற்ரெருவரும் அப்பகுதியில் பலியானுர். இவை தவிர பொதுமக்களுக்கு எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்ருர் ஒரு வயோதிபர்.

உயர் அதிகாரிகள் முதலில் அங்கு வந்துவிட்டதால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்ருர் மற்ரெருவர். ஒரு கடையில் சிறு சேதம் ஏற்பட்டதைத் தவிர அன்றிரவோ மறுநாளோ எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை என்ருர் மற்ரெருவர்.

சம்பவம் நடந்தபின் கடைகள் மூடப்பட்டு, சந்தை வியாபாரிகள், மாணவர்கள் கிடைத்த வாகனங்களில் வீடுநோக்கிச் சென்றபோதும் எவ்வித பாதிப்போ அசம்பாவிதமோ ஏற்படவில்லை என்ருர் ஒரு வர்த்தகர்.

சாவகச்சேரியில் பதட்டத்தின் மத்தியிலும் கடைகள் திறக்கப்பட்டு வர்த்தகநிலையங்களில் வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பஸ் நிலையத்தில் பிரயாணிகள் வழமைபோல் காணப்பட்டனர். சாவகச்சேரி நகரம் வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றது. [க]

# அவசரகாலச் சட்டம் நீடிப்பு

[கொழும்பு]

அ வ ச ர கா ல ச் சட்டம் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

# உரிமை...

(1ம்பக்கம்ம்2கலத்தொடர்ச்சி)
வெளிவந்துள்ளன.

கடந்த 19ம் திகதி காலை தெல்லிப்பழைக்கும் கட்டுவனுக்குமிடையிலுள்ள வறுத்தலைவிளான் ஊடாகச் செல்லும் பிரதான வீதியில் புதைத்துவைக்சப்பட்ட கு ண் டு வெடித்ததில் ஜீப்பில் வ ந் து கொண்டிருந்த யாழ். மாவட்ட இராணுவ பொறுப்பதிகாரி கோர்ணல் ஆரியப்பெருமாவும் ஓந இராணுவ வீரரும் பலியானதும் மற்றும் இரா ணு வ வீரர் படுகாயமடை ந் த து ம் தெரிந்ததே. (மா)

# வடபகுதியில்...

(1ம்பக்கம்ம்2கலத்தொடர்ச்சி)
மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டு, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்குத் தளர்த்தப்படும்.

# கண்காணிப்பு...

[1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலின்பின்னர் தீவிரவாதிகள் இரண்டு மணித்தியாலத்தில் இந்தியா சென் று ள் ளார்கள் என்று பிரதமர் இங்கு பேசுகையில் கூறினுர். அப்படியாயின் உங்களின் கண்காணிப்பு வலயம் தோல் வி கண்டுவிட்ட தா? என்று கேட்க விரும்புகிறேன்.

''வட பகுதியில் தீவிரவாதிகள் இருந்தால் உ ங் க ளி ன் திறமைவாய்ந்த புலனுய்வுத் துறையினரும், ஆயுதப் படையினரும், மிகவும் வ ல் ல மை யும், மதிநுட்பமும் வாய்ந்த இஸ்ரேல் 'மொசாட்' பிரிவினரும் என்னசெய்கிருர்கள்? (இ)

# தீவிரவாதிகளை...

(1ம்பக்கம்5ம்கலத் தொடர்ச்சி
பேசுகையில் கூறியதாவது:-

''தீவிரவாதிகள் தா ம் எடுத்த ஆயுதங்களைக் கீழே போட்டால் மன்னிப்பு வழங்கவும் தயாராகவுள்ளோம் பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண்போம்.

''எமது ஆயுதப்படையினர் எதையும் எதிர்நோக்கும் சக்தியுடையவர்கள். தீவிரவாதிகள் பயங்கரவாத நடவடிக்கைகளை இந்த நாட்டில் மேற்கொண்ட பின்னர், இருமணி நேரத்தில் இந்தியாவுக்குத்தப்பிச் செல்கின்றனர்.

''தீவிரவாதிகளுக்கு இந்தியாவல் பாதுகாப்புக் கிடைக்கும்வரை நாம் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தமுடியாது.

''இந்தியாவின் புதிய பிரதமர் திரு. ரஜீவ் காந்தி தமிழ் நாட்டிலுள்ள தீவிரவாதிகளின் முகாம்களை ஒழித்துக் கட்டமுன்வரவேண்டும். இதன் மூலம் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த உதவவேண்டும்.

''எமது உயிர் போனுலும் ஒற்றையாட்சிக்கு எதிரான எ தை யு ம் ஆதரிக்கமாட்டோம். இலங்கையை அழிக்க எந்த சக்தியாலும் முடியாது'' என்ருர். [இ-வெ]

# பீரங்கி, குண்டுகள்..

(1ம்பக்கம் 5ம்கலத்தொடர்ச்சி)
இரு சில்லுகளைவிட்டு, மற்ற இரு சில்லுகளுடன் வானில் ஏற்றப்பட்டதாகவும், மிகவும் பாரமுள்ள இப்பீரங்கியை நகர்த்தி ஏற்றுவதற்கு அப்பாதையால் மினிபஸ்ஸில் பிரயாணம்செய்த பிரயாணிகள் 40 பேரளவில் பயன்படுத்தப்பட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள்நிலையக் காவலாளி இக்கொள்ளை சம்பந்தமாக யாழ். பொலிசில் புகார் செய்துள்ளார். (மா)

# ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு விவேகானந்த சபையால் நாளை 25ம் திகதி நடத்தப்படவிருந்த அகில இலங்கை சைவசமயப் பாடப் பரீட்சை இன்றைய சூழ்நிலை காரணமாகப் பின்போடப் பட்டுள்ளது.

## திணைக்களப் பரீட்சை

யாழ். கல்வித் திணைக்களப் பரீட்சைச் சபையால் 6ம் வகுப்புத் தொடக்கம் 9ம் வகுப்பு வரை இம்மாதம் 26ந் திகதி நடைபெறவிருந்த பாடங்களுக்கான பரீட்சை மட்டும் டிசம்பர் 3ம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

# இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலைக் கட்டடத் திறப்பு விழாவும் ஏனைய நிகழ்ச்சிகளும் தவிர்க்க முடியாத காரணங்களினுல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# இளைஞர் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுதாவளைப் பகுதியில் பொலிஸார் வீடுகளில் தேடுதல்நடத்தியபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞர் ஒருவர் பலியானுர்.

இத்தேடுதலின்போது இயந்திரத் துப்பாக்கி, 2 நவீன துப்பாக்கி உட்படப் பெருமளவு ஆயுதங்ள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மாணவர்கள், இளைஞர்சள், குடும்பஸ்தர்கள்உட்பட சுமார் 75 பேர் கைதுசெய்யப்பட்டு. விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்கள் கிழக்குப் பிராந்திய பொலிஸ் தலைமை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (க)

# அடையாளம்...

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)
பொலிசாரின் பெயர் வருமாறு

ஆர். எம் ஏ. ருமநாயக்கா [பொறுப்பதிகாரி], சார்ஜன்ட் த யா ன ந் க, விமலசேன, கான்ஸ்டபிள்கள்:-பொன்னுத்துரை, லாபீர், சந்திரா ரத்ன, சந்திரசிறி, தயானந்த, விமலசேன, ராஜபக்ஷ, சுனில் சாந்த, புத்திக, பெரேரா, விஜயரத்ன, கமகே, பெர்ணுண்டோ, சுமனபால, திசாநாயக்கா, குணரத்ன, சிசிற, கருணுதாசா, வீரசிங்க, சாரதிகள்:- குமார, பண்டார.

# சாவகச்சேரி...

(1-ம் பக்கம்5கலத்தொடர்ச்சி)
கத்தின் பேச்சாளர் ஒருவர் நேற்று முன்தினம் புதுடில்லியில் கூறினுர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல் பல வாரங்களுக்கு முன்னரே மேற்கொள்ளப்பட்ட திட்டமென்றும், இத்தாக்குதலில் முதலில் 50 பேர் ஈடுபட்டதாகவும், பின்னர் 150 பேர் உதவிக்கு வந்ததாகவும் அப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.


# மரண அறிவித்தல்

## ச. ராஜ்குமார்

ஆனைக்கோட்டை

ராஜ்குமார்; பளை மகாவித்தியாலய ஆசிரியர், சண்முகராஜா ராஜ்குமார் காலமானுர். இவர் ஐ. சண்முகராஜா (மேலதிக அரசாங்க அதிபர் கிளிநொச்சி மாவட்டம்) திருமதி சண்முகராஜா அவர்களின் அன்பு சிரேஷ்ட புத்திரனும், உதயகுமார் (பேராதனை பல்கலைக் கழகம்), இமாசலகுமாரி (யாழ். பல்கலைக் கழகம் மருத்துவபீடம்), பிரதீப்குமார், சுரேஸ் குமார், யசோதராகுமாரி, லாவன்யகுமாரி அவர்களின் அன்புத் தமையனுமாவர். அன்னுரின் மரணச் சடங்குகள் 24-11-84 சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கட்டபாலை ஒழுங்கை, ஆனைக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

856 தகவல்-ஐ. சண்முகராஜா


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49. Telegram Telephone number 22389 - 24126.